# ‘கலப்பை மக்கள்’ இயக்க நிறுவனத் தலைவர் டாக்டர் பி.டி.செல்வகுமார் கழகத்தில் இணைந்தார்.




முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல அரசு பள்ளிக் கூடங்களுக்கு வகுப்பறைகள் – கலைஅரங்கங்களை தன் சொந்த செலவில் கட்டிக் கொடுத்த மக்கள் சேவகர் “தென் மாவட்டங்களில் சிறந்தகல்வி நன்கொடையாளர்” விருது பெற்ற கலப்பை மக்கள் இயக்க நிறுவனத் தலைவர் டாக்டர் பி.டி.செல்வகுமார் தலைமையில் 50க்கும் மேற்பட்ட அவ்வியக்கத்தின் நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர். அப்போது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ், ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்ச் சமூகத்துக்குப் புதுநெறி காட்டிய புலவன்

# பாரதியின் பெருமையை எட்டுத் திக்கும் கொண்டு சேர்ப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 12 -**

**தமிழ்ச்சமூகத்துக்குப் புதுநெறி காட்டிய புலவன் பாரதியின் பெருமையை எட்டுத்திக்கும் கொண்டு சேர்ப்போம் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பாரதியார் பிறந்தநாளையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

மகாகவி பாரதியாரின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**“திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்;**

**தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்”**

**எனப் பாடிப் பெண்களின் உயர்வை வலியுறுத்திய மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்தநாள்!**

**நமது திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்ததுமே பாட்டுக்கொரு புலவன் பாரதி மறைவெய்திய நூற்றாண்டினை யொட்டி அவரது புகழ் பரப்பும் 14 சிறப்பு அறிவிப்புகளை வெளியிட்டுச் செயல்படுத்தி வருகிறோம்.**

**பெண்களின் உயர்கல்வியை உறுதிசெய்யும் நமது அரசின் திட்டத்துக்குப் பாரதியின் கவிதையில் இருந்தே புதுமைப் பெண் எனப் பெயரிட்டோம்.**

**பாரதியாரின் நினைவு நாளினை “மகாகவி நாள்” எனக் கடைப்பிடிக்கவும் அறிவிப்பு செய்தோம்.**

**சிந்தனை, சொல், செயல் என அனைத்திலும் புதுமையை நோக்கி விரைந்து தமிழ்ச்சமூகத்துக்குப் புதுநெறி காட்டிய புலவன் பாரதியின் பெருமையை எட்டுத்திக்கும் கொண்டு சேர்ப்போம்!**


இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# கேரளாவில் துணைவேந்தர்கள் நியமனம்!

## உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு!

*புதுடெல்லி, டிச.12-*

கேரளாவில் பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர் நியமிக்கும் விவகாரத்தில், ஆளுநர் உடன்படாததால் உச்சநீதிமன்றமே துணைவேந்தர்களை நியமிக்க இருப்பதாக நீதிபதிகள் அதிரடியாக உத்தரவிட்டுள்ளனர்.



கேரளாவில் இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக் கும் விவகாரத்தில் அம்மாநில முதலமைச்சரின் கருத்தை ஆளுநர் ஏற்கவில்லை. இதனால், துணைவேந்தர் நியமனத்தில் தேடுதல் தேர்வுக் குழு அமைத்து, தலைவராக முன்னாள் நீதிபதி சுதான்சு துலியாவை உச்சநீதிமன்றம் நியமித்திருந்தது. இரண்டு பல்கலைக்கழகங்களுக்கும் துணை வேந்தர்கள் பெயர்களை தேர்வுக்குழு பரிந்துரைத்தும், வேந்தரான கேரளா ஆளுநர் இன்னும் முடிவெடுக்காமல் தாமதம் செய்தார்.

இதுகுறித்து கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் இருதரப்பு வாதங்களும் நிறைவுபெற்றது. இந்த நிலையில், இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர் நியமிக்கும் விவகாரத்தில் ஆளுநர் உடன்படவில்லை என்பதால், துணைவேந்தர்களை உச்சநீதிமன்றமே நியமிக்க உள்ளதாக நீதிபதிகள் அறிவித்துள்ளனர். இரண்டு பல்கலைக்கழகங்களுக்கும் தலா ஒரு பெயரை இறுதிசெய்து, வரும் 17ஆம் தேதி அறிக்கை தாக்கல் செய்ய தேர்வுக்குழுவுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

# எஸ்.ஐ.ஆர்., வழக்கில் ஜனவரி மாத இறுதியில் தீர்ப்பு!

## உச்சநீதிமன்றம் அறிவிப்பு!

புதுடெல்லி, டிச.12-

எஸ்.ஐ.ஆர்., வழக்கில் இந்த மாதத்துக்குள் வாதங்கள் அனைத்தும் முடிக்கப்பட்டு, ஜனவரி மாத இறுதியில் தீர்ப்பு வழங்கப்படும் என உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

பீகாரை தொடர்ந்து தற்போது தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி உட்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், பல மோசடிகள் நடைபெறுவதாக இந்தியா கூட்டணி கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றன.

உரிய கால அவகாசம் அளிக்காமலும், அவசர, அவசரமாகவும் எஸ்.ஐ.ஆர். பணிகள் மேற்கொள்ளப்படுவதால் பல்வேறு குழப்பங்கள் ஏற்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளன. எஸ்.ஐ.ஆர்., படிவங்கள் தொடர்பாக மக்களிடம் பல்வேறு சந்தேகங்கள் உள்ளதாக தெரிவித்துள்ள இந்தியா கூட்டணி கட்சிகள், இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்திலும் வழக்குகள் தொடர்ந்துள்ளன.

இந்த வழக்குகள் மீது விசாரணை நடைபெற்று வரும் நிலையில், ஒன்றிய அரசுக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் உச்சநீதிமன்றம் சரமாரியாக பல்வேறு கேள்விகளை எழுப்பி வருகிறது.

இந்நிலையில், எஸ்.ஐ.ஆர்.,க்கு எதிரான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, (Gfx in) எஸ்.ஐ.ஆர்., தொடர்பாக புதிய வழக்குகள் இனி அனுமதிக்கப்படாது என்று நீதிபதிகள் அறிவித்தனர். எஸ்.ஐ.ஆர்., தொடர்பாக தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்கள் தொடர்ந்த வழக்குகள் மீது, வரும் 17 ஆம் தேதி விசாரணை நடைபெறும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

ஆனாலும் பொதுவான பிரச்சினைகளின் மீதான வாதங்களில் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் தங்களது கருத்தை தெரிவிக்கலாம் என்றும். S.I.R. வழக்கில் இம்மாதத்துக்குள் வாதங்கள் அனைத்தும் முடிக்கப்பட்டு, ஜனவரி மாதம் இறுதியில் தீர்ப்பு வழங்கப்படும் என்றும் உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.



“என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற பரப்புரையை திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகர 1, 2 வது வார்டு 380, 387 ஆகிய வாக்கு சாவடியில் நகர செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் பரப்புரையை மேற்கொண்டு பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் கலந்துரையாடி வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார். உடன் தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிகா, கே.சுரேஷ்குமார், பெ.வினோத், ஆர்.செந்தாமரை, ஜி. சி.சி.கருணாநிதி, ஜெ.சரவணன், பி.வி.கே.கண்ணன், பி.உமாபதி, குமார், கெஜா, சாது, மனோகரன், அப்பு(எ)ஜெபராஜ், என்.ராஜ், ஆசைதம்பி, ராஜ்குமார், ராஜேஷ், ஆ.நாராயணன், மு.சுரேஷ், குடியரசன், மற்றும் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” - இன்று

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

*சென்னை,டிச.12-*

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி 12.12.2025 வெள்ளிக்கிழமை இன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.



**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 67 பாகம்: 125, இடம்: ராயல்பிளாட், சபாதி தெரு, பெரம்பூர்

மாலை: 4.30 மணி: வட்டம் 67, பாகம்: 126இடம்: மரியநாயகம் தெரு, IIலேன், பெரம்பூர்

மாலை: 5.00 மணி: வட்டம் 67, பாகம்: 140இடம்: உருதுபள்ளி மதுரைசாமி மடம் தெரு, பெரம்பூர்

மாலை: 5.30 மணி: வட்டம் 67 பாகம்: 141 , இடம்: தியாகராஜன் பாயிஸ் கிளப், பெரம்பூர்.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 65, இடம்: ராஜன் நகர் 2வது தெரு, கொளத்தூர்.

மாலை: 4.30 மணி: வட்டம் 64, இடம்: ஸ்ரீ கணேஷ் நகர், கொளத்தூர்.

மாலை: 5.00 மணி: வட்டம் 69, இடம்: எண்.6, கோபால் காலனி, கிழக்கு பிரதான சாலை.

**துறைமுகம் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 55அ, பாகம்: 55,56,57 இடம்: அம்மன்கோயில் தெரு, அப்பாசாமி தெரு சந்திப்பு

**துறைமுகம் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 54அ, பாகம்: 26, 27, 28 இடம்: பி.கே.ஜி 5வது சந்து, அண்ணா பிள்ளை தெரு, சென்னை-1.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 78, பாகம்: 13,14,15 இடம்: சிறுவர் விளையாட்டு திடல், 78வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகம் எதிரில்.

**எழும்பூர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 61, பாகம்: 145, 146 இடம்: சந்தோஷ் நகர், எக்மோர்

**திரு.வி.க.நகர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 74 பாகம்: 21, இடம்: எண்.18/1A, சேமாத்தம்மன் காலனி 3வது தெரு.

மாலை: 4.30 மணி: வட்டம் 74 பாகம்: 22, இடம்: எண்.21, ஏகாங்கிபுரம், 4வது தெரு

மாலை: 5.00 மணி: வட்டம் 74 பாகம்: 23, இடம்: எண்.60, ராஜிவ்காந்தி நகர்

மாலை: 5.30 மணி: வட்டம் 74, பாகம்:24, இடம்: எண்.33/43, ஏகாங்கிபுரம் மெயின்ரோடு

மாலை: 6.00 மணி: வட்டம் 74 பாகம்: 25, இடம்: எண்.42/56, ஏகாங்கிபுரம் மெயின்தெரு.

மாலை: 6.30 மணி: வட்டம் 74அ பாகம்: 20, இடம்: எண்.64, சந்திர யோகி சமாதி சாலை

மாலை: 7.00 மணி: வட்டம் 74அ பாகம்: 27, இடம்: எண்.29, டாக்டர் அம்பேத்கர் மன்றம், கிருஷ்ணதாஸ் சாலை, 4வது தெரு.

மாலை: 7.30 மணி: வட்டம் 74அ பாகம்: 29, இடம்: டாக்டர் அம்பேத்கர் மன்றம், கிருஷ்ணதாஸ் சாலை, 4வது தெரு.

மாலை: 8.00 மணி: வட்டம் 74அ பாகம்: 30, இடம்: குடிசைமாற்று வாரிய குடியிருப்பு, சந்திர யோகி சமாதி சாலை.

இரவு: 8.30 மணி: வட்டம் 74அ பாகம்: 43, இடம்: காசிவிஸ்வநாதன் மன்றம், சந்திரயோகி சமாதி சாலை, 2வது தெரு.

இரவு: 9.00 மணி: வட்டம் 74அ பாகம்: 44, இடம்: மங்களபுரம் பாய்ஸ் கிளப்

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 98அ பாகம்: 234, இடம்: லாக்மாநகர் 2வது தெரு

மாலை: 4.30 மணி: வட்டம் 98அ பாகம்: 235, இடம்: டேவிட்புரம்

மாலை: 5.00 மணி: வட்டம் 98ஆ பாகம்: 193, 194, 195, இடம்: கே.கே.நகர் முழுவதும்

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 104, பாகம்: 96, 97, 105

மாலை: 6.00 மணி: வட்டம் 104அ, பாகம்: 115, 119, 131

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட / பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

## எஸ்.ஐ.ஆர். விவாதம்:

# அமித் ஷா பயந்துவிட்டார்: ராகுல் காந்தி பேட்டி!

*டெல்லி, டிச.12-*



நாடாளுமன்றத்தில் எஸ்.ஐ.ஆர். விவாதத்தின் போது நேற்று நான் இடைமறித்து பேசியதில் அமித் ஷா பயந்துவிட்டார் என ராகுல் காந்தி பேட்டி அளித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று அமித் ஷா பதற்றத்துடன் இருந்தார். அவரின் கைகள் நடுங்கின, நீங்கள் கண்டிருப்பீர்கள். அமித் ஷா நாடாளுமன்றத்தில் தவறான வார்த்தைகளை பிரயோகப்படுத்தினார். அமித் ஷா பெரும் மன அழுத்தத்தில் இருந்ததை நாடே பார்த்தது என்று ராகுல் காந்தி பேட்டி அளித்தார்.

# 2035க்குள் இந்திய விண்வெளி நிலையம்!

*நெல்லை, டிச.12-*

நெல்லையில் உள்ள கடற்படை செயற்கைக் கோள் தகவல் தொடர்பாகத்தில் இஸ்ரோ தலைவர் நாராயணன் நேற்று அளித்த பேட்டி வருமாறு:-

பாரதப் பிரதமரின் அறிவிப்புப்படி 2035க்குள் இந்திய விண்வெளி நிலையம் அமைக்கப்படும். மொத்தம் 5 தொகுதிகள் கொண்ட இதில், முதல் தொகுதி 2028ல் விண்ணில் ஏவப்படும். நெல்லை அருகே குலசேகரன்பட்டினம் ஏவுதளப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 2027 தொடக்கத்தில் அங்கிருந்து ராக்கெட் ஏவப்படும். இது ஹரிகோட்டாவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் 2வது முக்கிய ஏவுதளமாக அமையும். மேலும், நிலவில் இறங்கி அங்கிருந்து மண் மாதிரிகளை பூமிக்குக் கொண்டுவரும் சந்திரயான் 4 திட்டத்திற்கான பணிகளும் மும்முரமாக நடந்து வருகின்றன என்றார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறை**

மி.து.ந.க.எண்.மே2/பி1/5464/2025 **குறுகிய கால மின் ஒப்ப அறிவிப்பு**

மின்துறையில் 1 பணிக்கு மின் ஒப்பம் கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை அவர்களால் வரவேற்கப்படுகிறது.

**Supply, Installation, Aiming, Testing and Commissioning of 7 Nos. of 16 Meter High Mast with LED Flood Light Fitting,450 mtrs of 31/2 x 95 sqmm and 1600 mtrs of 31/2 x 25 sqmm Alu Cable at Relocation of Broadway Bus stand to Island Ground located at Annasalai in Di - 59, Zone - 5.**

**பணியின் மதிப்பு: குறைந்தபட்சம் ரூ. 66,38,128.94**

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்துகொண்டு மின் ஒப்பத்தில் **18.12.2025 பிற்பகல் 2.15** மணிக்குள் பங்கேற்கலாம். **18.12.2025 பிற்பகல் 3.15** மணிக்கு ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 6609 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **காண்காணிப்பு பொறியாளர் / மின்துறை**




சென்னை கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.சம்பத்குமார் புதல்வர் இடது கால் எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதறிந்து மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு நலம் விசாரித்தார். உடன் சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன், செய்தி தொடர்பு துணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் உள்ளனர்.